தினமணி

# எள் சேமிப்பு தேவையில்லை: வேளாண்மை துணை இயக்குநர் வேண்டுகோள்

First Published : 03 Jun 2010 12:00:00 AM IST



விருத்தாசலம்: விவசாயிகள் தங்களிடம் உள்ள எள்ளை உடனடியாக விற்பனை செய்யுமாறு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**எள் விற்பனை குறித்து கடலூர் வேளாண்மை துணை இயக்குநர் தனவேல் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:**

விருத்தாசலம் சுற்றுவட்டாரப் பகுதியில் தற்போது இறவை எள் சந்தைக்கு வந்து கொண்டிருக்கிறது. இதன் வரத்து ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரை இருக்கும். தற்போது சந்தைக்கு வரும் எள்ளின் தரம் மானாவாரி எள்ளைவிட நன்றாக இருக்கும்.

மொத்த வரத்தில் 75 சதவீதம் சிவப்பு எள்ளாகும். மீதியுள்ள வெள்ளை எள், ஏற்றுமதி மற்றும் அடுமனை தயாரிப்பு பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது.

எண்ணெய் ஆலையாளர்கள் ஜூலை முதல் செப்டம்பர் வரை கர்நாடக மாநிலத்தில் இருந்தும், நவம்பர், டிசம்பர் மாதங்களில் குஜராத் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் இருந்தும், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் ஆந்திரம், ஒரிசா மாநிலங்களில் இருந்தும் கொள்முதல் செய்கின்றனர்.

மற்ற மாநில எள்ளைக் காட்டிலும் தமிழ்நாட்டு எள் தரம் நன்றாக இருப்பதால், மற்ற மாநிலத்திலிருந்து வாங்கப்படும் எள்ளோடு கலந்து எண்ணெய் எடுக்கின்றனர்.

**புதுமை திட்டம்**

எள் பயிரிடும் விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மைப் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் சிவகிரி சந்தையில் 15 வருட சந்தைத் தகவல்களை ஆராய்ந்தது.

நல்லெண்ணெய்க்கான சீரான தேவை, மற்ற மாநிலங்களில் உள்ள எள் பயிர்களின் நிலைமை, அவற்றின் மூலம் பெறப்படும் தொடர் வரத்து மற்றும் ஆராய்ச்சி முடிவுகளின்படி

வரும் மாதங்களில் சிவப்பு எள்ளின் விலை தமிழ்நாட்டில் கிலோ ரூ.41 முதல் ரூ.43 வரை இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் விலை ஏற வாய்ப்புள்ளது. இருப்பினும் எள் சேமிப்பு முறையாக செய்யவிட்டால் எள்ளின் தரம் குறைந்து விடும்.
எனவே விவசாயிகள் தங்களிடம் உள்ள எள்ளை மேற்கூறிய விலையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் எந்தப் பிடித்தமும் இல்லாமல் விற்று பயனடையுமாறு கடலூர் வேளாண்மை துணை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**தானியங்களை பாதுகாக்கும் எளிய கருவி**

First Published : 03 Jun 2010 12:00:00 AM IST



புதுச்சேரி: பொதுவாக விவசாய விளை பொருள்களான நெல், அரிசி, கம்பு, கேழ்வரகு, உளுந்து பச்சைப் பயறு, காராமணி, கோதுமை மற்றும் தவிடு வகைகள், நிலக்கடலை போன்றவற்றை விவசாயிகள் நல்ல விலைக்கு விற்பதற்காக சேமித்து வைக்கிறார்கள்.
சேமிப்புப் பழக்கம் முந்தைய காலத்தில் இருந்து வரும் ஒரு முறை. விவசாயிகள் தங்கள் விளைநிலத்தில் உற்பத்தி செய்த தானியங்கள் மற்றும் பயிறு வகைகளை குதிர்களிலும், தொம்பைகளிலும் பெரிய பெரிய பானைகளிலும் சேகரித்து வைத்தனர்.
இப்படி சேகரிக்கும் தானியங்களைப் பூச்சிகள் தாக்காத வகையில் அந்த தானியங்களில் சாம்பல் கலந்து வைத்தனர். களிமண், செம்மண், வேப்பந்தழை, நொச்சித் தழை இதையெல்லாம் கலந்து வைத்தனர். இவை பூச்சி விரட்டிகளாகச் செயல்பட்டன. அதற்கு அடுத்த நிலையில் விவசாயிகள் தங்கள் தானியங்ளையும் பயிறு வகைகளையும் சாக்குப் பைகளில் மூட்டைகளாகப் பிடித்து சேமிக்கின்றனர். இந்த மூட்டைகளை அறைகளில் ஒரு மெல்லியப் பலகையை விரித்து அதன் மீது அடுக்கி வைப்பதால் அந்தச் சேமிக்கும் அறையில் தரை வழி பூச்சி, சுவர் வழி பூச்சி மூட்டைக்குச் செல்லாது.
எத்திலின் தைபுரோமைடு என்ற நச்சுவாயுவை அந்த சேமிப்பு அறையில் செலுத்தி மூட்டம் போடச் செய்வதால் அதில் உள்ள வேதிப்பொருளின் வாசனைக்காக அதில் பூச்சிகள் தாக்காமல் பாதுகாக்கப்படுகிறது. அப்படி செய்வதற்கு விலை அதிகம். தனிப்பப்பட்ட விவசாயி செய்ய முடியாது. அந்த வாயுவின் விஷம் தானியங்களில் படியும் வாய்ப்பு இருக்கிறது. அதைச் சாப்பிடும்போது நச்சு உடலில் செல்லும்.
**கயிரமோன் பொறி**
இதையெல்லாம் கருத்தில் கொண்டு ஒரு தானியத்தைச் சேமிக்கும்போது அதில் வாயு நச்சு சேராமல் தரமாகவும், அதன் தன்மை எதுவும் மாறாமல் இருப்பதற்காக புதுச்சேரி வேளாண் அறிவியல் நிலையம் பூச்சியியல் துறையின் மூலமாக கடந்த 2 ஆண்டுகளாக கயிரமோன் பொறியைக் கொண்டு முதல் தர ஆய்வை புதுச்சேரி மாநிலத்தில் விவசாயிகளின் சேமிப்பு கிடங்குகளில் ஆராய்ச்சி செய்தது.

இந்தப் பொறியில் அப்போது கயிரமோன் கொப்பியில் உள்ள ஹார்மோன் வாசனைக்காக அரிசியில் வரக்கூடிய மூக்கு வண்டு, கருப்பு வண்டு மற்றும் அரிசி மற்றும் தவிட்டில் இருந்து வரக்கூடிய டிரைபோலியம் என்ற சிகப்பு வண்டுகளும் ஏராளமாக இந்த கயிரமோன் பொறியை நோக்கி கவர்ந்து வந்தன.

இந்த வண்டுகள் பொறியில் சிக்குவதால் விவசாயிகளுக்கு இது மிகவும் வரபிரசாதமாக அமைந்தது. இதைப் பற்றி இந்த நிறுவனத்தின் பூச்சியியல் நிபுணர் என். விஜயகுமார் கூறுகையில், இந்த இனக்கவர்ச்சி பொறி, நச்சுத்தன்மை அற்றது. அதில் வைக்கக் கூடிய கயிரமோன் என்ற ஹோர்மோன் தானியங்களைத் தாக்கக்கூடிய வண்டுகளில் இருந்து எடுக்கப்பட்டது. இந்தக் கயிரமோன் உயிர்தன்மை உள்ளது. சுற்றுச்சூழலைப் பாதிக்காது. பயன்படுத்தும் முறை எளிது. ஒரு பாக்கில் 5 இருக்கும். இதன் விலை ரூ.160. இது 6 மாதம் வேலை செய்யும்.

இதைக் கேட்கும் விவசாயிகளுக்கு நாங்கள் வாங்கிக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இந்தத் தொழில்நுட்பம் நன்றாக இருக்கிறது.இதைத் தவிர 6 மாதத்துக்கு மேல் பயிறு வகைகளைச் சேமித்து வைப்போர் அதில் நல்லெண்ணெய் தடவி வைக்க வேண்டும். அப்படி செய்தால் அந்தப் பயிறை தாக்கும் வண்டு உள்ளே போகாது. மணிலா பயிறை சேமிக்க மஞ்சள் கலந்து வைக்க வேண்டும் என்று கூறினார்.

**நல்ல வருமானம் தரும் கிளேடிஓலஸ் மலர் சாகுபடி**

First Published : 03 Jun 2010 12:00:00 AM IST



கிளேடிஓலஸ் வண்ண மலர்கள்

சிதம்பரம்: பூங்கொத்துகளில் பய ன்படுத்தப்படும் வண்ண மலர்களே கிளேடிஓலஸ். வடமாநிலங்களில் பயிர் செய்யப்படும் இம் மலரை, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை தமிழகத்தில் அறிமுகம் செய்து சாகுபடியில் வெற்றி கண்டுள்ளது. நல்ல வருமானம் தரக்கூடிய இம் மலர் சாகுபடியை தமிழக விவசாயிகள் சிறப்பாக செய்யலாம்.

**சாகுபடி குறிப்புகள்:**

இம் மலர் கரணைகள் மூலம் சாகுபடி செய்யப்படுகிறது. வெங்காயம் மற்றும் பூண்டு குடும்பத்தைச் சேர்ந்தது கிளேடிஓலஸ். இம் மலர் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் நல்ல வடிகால் வசதி கொண்ட நிலத்தை தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

தண்ணீர் தேங்கி நிற்கும் களிமண் நிலங்களில் இம்மலர் நன்றாக வளராது. மழை மற்றும் பனிக் காலங்களில் 15 முதல் 20 செல்சியஸ் வரை வெப்பம் கொண்ட பகுதிகளில் இளம்பருவத்தில் நன்றாக வளரும் தன்மை கொண்டது.

பின்னர் வெப்பத்தின் அளவு 40 டிகிரி செல்சியஸ் வரை அதிகமானாலும் மலர் செடியின் வளர்ச்சி பாதிக்கப்படாது. இம்மலர் சாகுபடி செய்ய தேர்வு செய்யப்படும் நிலத்தில் கார அமிலத்தன்மை 6 முதல் 7 வரை இருத்தல் வேண்டும்.

இவ்வாறு தேர்வு செய்தபின் வெப்பப் பகுதிகளில் நன்றாக வளரும் தன்மை கொண்ட கிளேடிஓலஸ் மலர் வகைகளான அமெரிக்கன் பியூட்டி, சம்மர் சன்ஷைன், கேண்டிமென் உள்ளிட்ட ரகங்களை விவசாயிகள் தங்கள் தோட்டங்கள் மற்றும் நிலங்களில் நடவு செய்யலாம்.

கிளேடிஓலஸ் கரணைகளை வரிசையாக 10 செ.மீ. இடைவெளியில் நட வேண்டும். பின்னர் 2 அல்லது 3 வாரங்களுக்கு பூவாளிகளை கொண்டு தொடர்ச்சியாக நீர் பாய்ச்ச வேண்டும்.

விதைத்து 2, 3 வாரங்களில் மெதுவாக கிளேடிஓலஸ் மலர் செடி முளைக்கத் தொடங்கும். இத்தகைய காலகட்டத்தில் விவசாயிகள் கண்டிப்பாக நீர்பாசனத்தை தொடர்ந்து செய்ய வேண்டும். 2 முதல் 4 இலைகள் விடும் தருணத்தில் 12 முதல் 17 நாள்கள் வரை தொடர்ந்து நீர்பாய்ச்ச வேண்டும். பின்னர் களைகளை கட்டுப்படுத்த களையெடுக்கும் பணியை தொடர்ந்து மேற்கொள்வது அவசியம்.

இவ்வாறு சாகுபடி பணிகளை மேற்கொண்ட 45-60 நாள்களில் கிளேடிஓலஸ் பூங்கொத்துக்கள் பூக்கத் தொடங்கும். இத்தகைய தருணத்தில் விவசாயிகள் கிளேடிஓலஸ் அறுவடை காலத்தை அடைந்து விட்டதை தெரிந்து கொண்டு அறுவடை செய்து விற்பனை பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

கிளேடிஓலஸ் பூக்களை அறுவடை செய்தபின் கரணைகளை மீண்டும் தோண்டி எடுத்து 2 சதவீதம் பெவிஸ்டின் பூஞ்சானக் கொல்லி மருந்தில் நனைத்து பதப்படுத்த வேண்டும்.

**மருத்துவ குணங்கள்:**

கிளேடிஓலஸ் கரணைகளை நன்றாக பொடி செய்து உணவுடன் கலந்து உண்டால் வயிற்றுப் போக்கை கட்டுப்படுத்தும். இச்செடியை கசக்கி சூடுபடுத்தி தலையில் தேய்த்தால் தலைவலி போகும். இப் பழக்கம் வடமாநிலங்களில் நடைமுறையில் உள்ளது. மலைப் பிரதேசங்களில் வாழும் மக்கள் கிளேடிஓலஸ் மலர் கரணைகளை உணவாக உட்கொள்ளும் பழக்கம் ஜம்மு மற்றும் வடமாநிலங்களில் உண்டு.

**கிளேடிஓலஸ் ஆண்டு அறிவிப்பு:**

2010-11-ம் ஆண்டை கிளேடிஓலஸ் மலர் ஆண்டாக இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது. இந்நிலையில் குறைந்த செலவில் அதிக லாபம் தரும் இந்த மலரை சாகுபடி செய்து விவசாயிகள் தமிழகத்தில் மலர்புரட்சியை ஏற்படுத்தலாம் என அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை விரிவுரையாளர் தி.ராஜ்பிரவீன் கூறியுள்ளார்.

தினமலர்

**சொர்ணவாரி பட்டத்திற்கு விதை நெல் தட்டுப்பாடு : அதிகாரிகள் அலட்சியத்தால் விவசாயிகள் அவதி**

கடலூர் : கடலூர் மாவட்டத் தில் விதை நெல் கிடைக் காமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். இதனால் விவசாயிகள் மாற் றுப் பயிரை தேட வேண் டிய நிலைக்கு தள்ளப்பட் டுள்ளனர்.

சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகாக்கள் காவிரி நீரைக் கொண்டு ஜனவரி முதல் ஏப்ரல் மாதம் வரை உள்ள நவரை பட்டத்தில் நெல் விளைவிக்கப்படுகிறது. ஜூன், ஜூலை மாதங்களில் குறுவையும், பின்னர் ஒட்டு மொத்தமாக சம்பா பருவத்தில் பெருமளவு நெல்லும் பயிர் செய்யப்படுகின்றன. இதில் நவரை, குறுவை, சம்பா பருவம் முழுவதும் காவிரி,மற்றும் ஏரி பாசனத்தை நம்பியே விவசாயிகள் உள்ளனர். கோடை காலத்தில் ஏரி தண்ணீர் கிடைக்கவில்லையென்றாலும் நிலத்தடி நீர் உள்ள பகுதிகளில் மின்சார மோட்டரை பயன்படுத்தி சொர்ணவாரி பட்டத்தில் கடலூர், பண்ருட்டி, சிதம்பரம் போன்ற பகுதிகளில் பயிர் செய்யப்படுகிறது. விவசாய உற்பத்தியை பெருக்குவதற்கு தமிழக அரசு பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கி பல்வேறு திட்டங்களை தீட்டி வருகிறது. இதன் மூலம் நவீன தொழில் நுட்பத்தில் சிறந்த விதை நேர்த்தி, மண்ணின் தன்மை பாதுகாத்தல், பூச்சியை கட்டுப் படுத்துதல், அதிக மகசூல், வயது குறைந்த பயிர்களை புகுத்துதல் போன்றவற்றில் அரசு அதிக கவனம் செலுத்துகிறது.

தற்போது கடலூர் மாவட்டத்தின் நிலத்தடி நீர் தாராளமாக கிடைத்து வருவதால் சொர்ணவாரி பட்டத்தில் அதிகளவு நெல் பயிர் செய்யப்படுகிறது. விவசாயிகள் அதிக மகசூல் பெற மூலகாரணமாக இருப்பது விதை தான். அதனால் அரசு வேளாண்துறை மூலம் விதை நேர்த்தி செய்து விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கி வருகிறது. கடந்த 3 வாரமாக நெல் விதை கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்பட்ட சொற்ப அளவு நெல் மூட்டைகள் வந்த உடனேயே விற்று தீர்ந்துவிட்டன. அதனால் தாமதமாக பயிர் செய்யும் விவசாயிகளுக்கு விதை நெல் கிடைக்கவில்லை. வேளாண் விரிவாக்க மையங்களை அணுகினால் நெல் விதைகள் விற்று தீர்ந்துவிட்டன. தனியார் கடைகளை கைகாட்டி உத்தரவாதத்துடன் வாங்கிச் செல்லுங்கள் என கூறுகின்றனர். ஆனால் தனியார் கடைகளில் ஒரு கிலோ நெல் விதைக்கு 6 ரூபாய் கூடுதலாக விற்பனை செய்யப்படுகிறது. நாளுக்கு நாள் பெருகி வரும் மக்கள் தொகையால் விளை நிலங்கள் மனைகளாக மாறி வருகின் றன. இருக்கின்ற விளை நிலத்திலும் பயிர் செய்ய 100 நாள் வேலை திட்டத்தினால் யாரும் வேலைக்கு வருவதில்லை.

இதனால் மனித உழைப்பு அதிகமாக தேவைப்படும் பயிர்களில் இருந்து மாற்றப்பட்டு கரும்பு, சவுக்கு, எண் ணைப்பனை போன்ற பல்லாண்டு பயிர்களை விவசாயிகள் நாடிச் செல்கின்றனர். எஞ்சியுள்ள இடத்தில் நிலத்தின் உரிமையாளர்களே செய்து வரும் விவசாய நிலங்கள் என பார்க்கப் போனால் மிகவும் குறைவு. அதுபோன்ற குறைவான இடத்தில் இருந்துதான் மக்களுக்கு தேவையான நெல் உற்பத்தியை பெருக்க வேண்டும். ஆனால் வேளாண் அதிகாரிகள் மெத்தனப்போக்கினால் விதை கிடைக்காத விவசாயிகள் மானாவாரி பயிருக்கு மாறுவதைத் தவிர வழியில்லை என் கின்றனர். இதனால் நெல் உற்பத்தி குறைய வாய்ப் புள்ளது. இனிமேலாவது அதிகாரிகள் காலத்தோடு விதை நெல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வங்கிகளில் விவசாய கடன் பெற போலி ஆவணம் தயாரிப்பு : தமிழர் விடுதலை படை ஆசாமி உட்பட இருவர் கைது**

"கடலூர் : வங்கிகளில் விவசாய கடன் பெற போலி ஆவணங்கள் தயாரித்து கொடுத்த இருவரை போலீசார் கைது செய்தனர். கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அடுத்த கானூர் கிராமத்தில் இயங்கி வரும் ஸ்டேட்

பாங்க் கிளை மேலாளர் தமிழ்ச்செல்வன், சிலர் போலி ஆவணம் தயாரித்து விவசாய கடன் கேட்டு விண்ணப்பித்திருப்பதாக கடந்த நவ. 24ம் தேதி எஸ்.பி.,யிடம் புகார் செய்தார். மாவட்ட குற்றப் பிரிவு போலீசார் விசாரணை நடத்தி பாலமுருகன், பிச்சைமணி, தில்லைகோவிந்தன், காசிநாதன் ஆகியோரை கைது செய்தனர். இந்த வழக்கில் சம்மந் தப்பட்டவர்களுக்கு போலியாக பட்டா, சிட்டா, அடங்கல் தயாரித்து கொடுத்த முக்கிய குற்றவாளியான கம்மாபுரம் ரங்கநாதன் (49) சென்னை ஐகோர்ட்டில் முன்ஜாமீன் பெற்றார்.

இச்சம்பவம் குறித்து கலெக் டர் சீத்தாராமன் உத்தரவின் பேரில், எஸ்.பி., அஷ்வின் கோட்னீஸ் மேற்பார்வையில், மாவட்ட குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் ரத்தினவேலு, சப் இன்ஸ்பெக்டர் மகேஸ்வரி, தனிப்படை பிரிவு சப் இன்ஸ் பெக்டர் அம்பேத்கர் மற்றும் போலீசார் கொண்ட தனிக்குழு விசாரணை மேற்கொண்டனர். அதில், கடலூர் மாவட்டத் தில் கருவேப்பிலங்குறிச்சி, ஸ்ரீமுஷ்ணம், சோழதரம், காட்டுமன்னார்கோவில், அரியலூர் மாவட்டத்தில் ஆண்டிமடம், வரதராஜன்பேட்டை, அழகாபுரம் பகுதிகளில் உள்ள இந்தியன் வங்கி, ஸ்டேட் பாங்க் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பலர் போலி ஆவணங்கள் கொடுத்து விவசாய கடன் பெற்றிருப்பது தெரியவந்தது. மேலும், சேத்தியாத்தோப்பு அடுத்த வாழக்கொல்லை கிராமத்தைச் சேர்ந்த தண்டபாணி மகன் செந்தில் (34) என்பவர் தனது 6 ஏக்கர் முந்திரி தோப்பிற்கு 10 ஏக்கர் கரும்பு பயிரிட்டிருப்பதாக போலியாக ஆவணங்கள் தயாரித்து சேத்தியாத்தோப்பு கூட்டுறவு சர்க் கரை ஆலையிலும், மற்றொரு போலி ஆவணம் மூலம் ஸ்டேட் பாங்கிலும் விவசாய கடன் வாங்கியிருந்தார்.

அதன்பேரில் தனிப்படை போலீசார், நேற்று காலை செந்திலை பிடித்து விசாரித்தனர். அதில் அவர் தமிழர் விடுதலை படையில் தீவிர உறுப்பினராக செயல்பட்டு வந்ததும், அதன்பிறகு கம்மாபுரம் ரங்கநாதன் (ஏற்கனவே நடந்த போலி ஆவணம் தயாரித்து மோசடி செய்த வழக்கில் முன் ஜாமீன் பெற்றவர்) உதவியுடன் போலி ஆவணம் தயாரித்து வங்கியில் கடன் பெற்று வருவதும், அதேபோன்று வங்கி கடன் பெற முயற்சிப்பவர்களுக்கு சான்றுகள் பெற்றுத் தருவதாக கூறி பணத்தை பெற்றுக் கொண்டு அவராகவே சான்றுகள் தயாரித்து கொடுத்ததை ஒப்புக் கொண்டார். அவர் கொடுத்த தகவலின் பேரில் கம்மாபுரம் ரங்கநாதனை தனிப்படை போலீசார் கைது செய்தனர். பின்னர் இருவர் வீட்டிலும் சோதனையிட்டதில் விருத்தாசலம், காட்டுமன்னார்கோவில், ஆண்டிமடம் தலைமையிட துணை தாசில்தார்கள், பல்வேறு வி.ஏ.ஓ.,க்கள், கரும்பு ஆய் வாளர், ஸ்ரீமுஷ்ணம் சார்பதிவாளர், ஸ்டேட் பாங்க், இந்தியன் பாங்க் மற்றும் சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை சீல்கள், தாலுகா அலுவலகத்தில் பயன் படுத்தப்படும் கோபுர சீல் உள்ளிட்ட 39 போலி சீல்களையும், பல்வேறு அதிகாரிகளின் கையெழுத்தை போட்டு பழகி பார்த்த பேப்பர் களையும் பறிமுதல் செய்தனர். மேலும், அடுத்தவர் நிலத்தை வாங்கி ஸ்ரீமுஷ்ணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ததாக தயாரிக்கப் பட்ட இரண்டு போலி ஆவணங்கள், வங்கிகளில் கடன் பெற விண்ணப்பிப் பதற்காக தயாரித்து வைத்திருந்த 90 போலி ஆவணங்களையும் கைப்பற்றினர்.

இதுபற்றி தகவலறிந்த கலெக்டர் சீத்தாராமன், நேற்று மதியம் மாவட்ட குற்றப் பிரிவிற்கு நேரில் சென்று அங்கு போலீசார் கைப்பற்றிய போலி ரப்பர் ஸ்டாம்புகளை பார்வையிட்டு போலீசாரை பாராட்டினார். மேலும், இதுகுறித்து தொடர்ந்து விசாரணை நடத்த உத்தரவிட்டார். இது குறித்து கலெக்டர் சீத்தாராமன் கூறியதாவது: கடலூர் மற்றும் அரியலூர் மாவட்ட வங்கிகளில் கடன் பெற போலி ஆவணங்கள் தயாரித்திருப்பது கண்டுபிடித்திருப்பதால், குறிப்பிட்ட வங்கிகளில் ஏற்கனவே கடன் கொடுத்த ஆவணங்கள்

ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். இதுபோன்ற முறைகேடுகளை தவிர்த்திட அரசு அலுவலர்கள் தங்களது ரப்பர் ஸ்டாம் புகளை தங்கள் பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும். சான்றிதழ்களில் முத்திரையை தெளிவாக பதிக்க வேண்டும். கூடுமானவரை "மெட்டல் சீல்' பயன்படுத்த வேண்டும். முதல்கட்டமாக வருவாய்த் துறை அதிகாரிகள் தாங்கள் பயன்படுத்தும் ரப்பர் ஸ்டாம்புகளின் மாதிரியை எனது நேர் முக உதவியாளரிடம் (பொது) ஒப்படைக்க வேண் டும். இனி வரும் காலங்களில் பெறப்படும் சான்றுகளில் சந்தேகம் ஏற்பட்டால் சம்மந்தப்பட்ட அலுவலரின் ரப்பர் ஸ்டாம்ப் மாதிரியுடன் ஒப்பிட்டு பார்க்க இந்த மாதிரி பயன்படுத்தப்படும். மாவட்டத்தில் ரப்பர் ஸ்டாம்ப் செய்வோர் பட்டியல் தயாரிக்க உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் அரசு அலுவலகங்களுக்கு ரப்பர் ஸ்டாம்ப் செய்ய ஆர்டர் வந்தால், சம்மந்தப் பட்ட அலுவலரிடம் கடிதம் பெற்ற பிறகே செய்து தர வேண்டும். அவ்வாறு இன்றி அரசு அலுவலக ரப்பர் ஸ்டாம்ப் செய்து கொடுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மூங்கில் நடவு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு வனத்துறை மூலம் நாற்றுகள் விற்பனைக்கு ஏற்பாடு**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகள் முள் இல்லாத மூங்கில் நடவு செய்து வருவாய் பெற வனத்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மூங்கில் நாற்றுகள் வனத்துறை மூலம் விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூங்கில் வனப்பயிர் என்பதோடு பணம் தரும் பயிராகும். மூங்கில் வகைகளில் தற்போது விதையில்லாத உற்பத்தி மூலம் கணுக்களில் இருந்து முள்ளில்லாத மூங்கில்கள் வனத்துறை நாற்றங்காலில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதில், நான்கு வகையான மூங்கில்கள் விவசாய நிலங்களில் பயிர் செய்ய ஏற்றவையாகும். "பாம்பூசா நியூட்டன்ஸ்', "பாம்பூசா பால்கோவா', "பாம்பூசா வல்காரிஸ்', "பாம்பூசா முக்கல்பா' இவ்வகை மூங்கில்களை விவசாயிகள் நடவு செய்து அதிக லாபம் பெற முடியும். இவ்வகை முள்ளில்லாத மூங்கில்கள் விவசாய நிலங்களில் 5க்கு 5 மீட்டர் இடைவெளியில் நட்டு நன்கு பராமரித்து வந்தால் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் ஏக்கருக்கு குறைந்தபட்சம் 60 ஆயிரம் ரூபாய் வரையில் லாபம் பெற முடியும்.

தர்மபுரி நவீன நாற்றங்கால் கோட்ட வன அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் தர்மபுரி மாவடட்த்தில் தொப்பூர், தேனி மாவட்டத்தில் வால்கரசு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெருங்களத்தூர், விழுப்புரம் மாவட்டத்தில் ஆழ்வார்மலை ஆகிய நவீன நாற்றங்கால் மையங்களில் முள்ளில்லாத மூங்கில் நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு நாற்று 10 ரூபாய் வீதம் மிக குறைந்த விலையில் பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவ்வகை மூங்கில் வளர்க்க தோட்டக்கலை துறை மூலம் மூன்றாண்டுக்கு மானியமும் வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு ஏக்கருக்கு 5க்கு 5 மீட்டர் இடைவெளியில் நாற்றுகள் நட 170 எண்ணிக்கை தேவை, குழி எடுத்தல், நடுதல் பணிகளுக்கு செலவு ஒரு செடிக்கு 12 ரூபாய் ஆகும், நாற்றுக்களுக்கு ஆகும் செலவு 1,700 ரூபாய், இதர பராமரிப்பு செலவு 5,000 ரூபாய் ஒரு ஏக்கருக்கு மொத்த உற்பத்தி செலவு 8,740 மட்டுமே. இரண்டாம் ஆண்டு முதல் ஆறாம் ஆண்டு வரையில் பராமரிப்பு செலவு ஆண்டுக்கு 3,000 ரூபாய் வீதம் ஐந்தாண்டுக்கு 15,000 ரூபாய் செலவாகும். ஆறு ஆண்டுக்கு பின் ஒரு குத்துக்கு 20 வீதம் 170 குத்துக்கு 3,400 மூங்கில் கிடைக்கிறது. ஒரு மூங்கில் விலை 25 வீதம் 3,400 மூங்கில்களுக்கு கிடைக்கும் வருவாய் 85 ஆயிரம் ரூபாய் ஆறாண்டு பராமரிப்பு செலவினங்கள் போக 60 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும். மூங்கில்களை அறுவடைக்கு வெட்டும் போது, குதிரை லாட வடிவில் முதிர்ந்த மூங்கில்களை மட்டுமே வெட்ட வேண்டும்.

வளர்ந்து வரும் இளம் மூங்கில்களை ஏழு அல்லது எட்டு எண்ணிக்கை விட்டு விட வேண்டும். அடுத்த அறுவடை இரு ஆண்டுகள் கழித்து இதே முறையில் வெட்ட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் மண்கொத்தி, களை எடுத்தல், நுண்ணுயிர் உரங்கள் இடுதல் போன்ற பராமரிப்பு பணிகளை செய்திட வேண்டும். நாற்றுக்கள் மற்றும் இதர விபரங்கள் பெற விரும்புவோர், "கோட்ட வன அலுவலர், நவீன நாற்றங்கால் கோட்டம், தர்மபுரி' என்ற முகவரியிலும், டெலிஃபோன் 04342 - 234 215 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

தர்மபுரி: நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் மாரண்டஅள்ளி கால்நடை மருத்தகத்தில் மூன்று நாட்கள் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியம் முகாமை துவக்கி வைத்து பேசினார். மாரண்டஹள்ளி அணைக்கட்டு ஆயக்கட்டு விவசாயிகள் சங்க தலைவர் சேட்டு பயிற்சி முகாம் கையேட்டினை வெளியிட்டார். அ.மல்லாபுரம் கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர் கணேஷ்பாபு, மகேந்திரமங்கலம் மருந்தக உதவி மருத்துவர் கோகிலவாணி ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். ஏற்பாடுகளை மாரண்டஹள்ளி கால்நடை மருத்துவமனை உதவி மருத்துவர் சரவணன் செய்திருந்தார்.

**மேலவையில் இடம் விவசாயிகள் தீர்மானம்**

ஈரோடு: தமிழக மேலவையில் மண்டல வாரியாக விவசாயிகளுக்கும் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்க கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. மாவட்டத் தலைவர் குமாரசாமி தலைமை வகித்தார். மாநில தலைவர் ரத்தினசாமி முன்னிலை வகித்தார். பொருளாளர் லட்சுமணன், செந்தில்நாதன், மாவட்ட செயலாளர் சுப்பு உள்பட பலர் பங்கேற்றனர். தமிழக சட்டசபையில் மேலவை மீண்டும் வருவதற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலவையில் தமிழகத்தை ஆறு மண்டலங்களாக பிரித்து ஒவ்வொரு மண்டலத்துக்கும் ஒரு பிரதிநிதியை மேலவைக்கு தேர்வு செய்து விவசாய தொழிலை ஊக்குவிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**எல்லா காய்கறியும் விலை உயர்வு நுகர்வோர் தயக்கம்**

சிவகங்கை: சிவகங்கையில் கடந்த வாரத்தை விட நேற்று, சகல காய்கறிகளின் விலையும் அதிரித்தது.

எண் ணெய், உளுந்து விலையும் தப்பவில்லை. வரத்து குறைவால் உளுந்து, 12 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. சிவகங்கை வாரச்சந்தையில் நேற்றைய விலை நிலவரம் (கிலோ): கடந்த வாரம் 12 ரூபாய்க்கு விற்ற கத்தரிக்காய்- 20; 12 க்கு விற்ற வெண்டைக்காய்-15; 29 க்கு விற்ற பாகற்காய்- 24; 24 க்கு விற்ற முருங்கை பீன்ஸ்- 30; 20 க்கு விற்ற கேரட்- 24; 14 க்கு விற்ற முள்ளங்கி- 16; 16 க்கு விற்ற உருளைக்கிழங்கு- 15; 12 க்கு விற்ற முட்டை கோஸ்- 15; தக்காளி- 30; கருணை கிழங்கு- 40; இஞ்சி- 100; அவரைக்காய்- 40; 50 க்கு விற்ற பட்டர் பீன்ஸ்- 60; 14 க்கு விற்ற சின்ன வெங்காயம்- 16; பெல்லாரி- 12; காலி பிளவர்- 20; 20க்கு விற்ற சேணை கிழங்கு- 24; சேப்பங்கிழங்கு- 24; 24க்கு விற்ற பச்சை மிளகாய்- 30; பீட்ரூட்- 10; மாங்காய்- 20; சவ்சவ்- 12; சோயா பீன்ஸ்- 60; எலுமிச்சை- 40; பூசணி- 12 ரூபாய். மாம்பழம் மலிவு: ஆப்பிள்- 120, இரண்டாவது ரகம் 100; சாத்துக்குடி-50; ஆரஞ்சு- 60; மாம்பழம், கடந்த வாரம் 60 க்கு விற்ற சப்பட்டை- 40, 40 க்கு விற்ற பாலாமணி- 30, 30 க்கு விற்ற காசாலட்டு-25; சப்போட்டா-10;

திராட்சை வெள்ளை- 60, கறுப்பு-40 ரூபாய். சிவகங்கையில் மளிகை பொருள் விலை: துவரம் பருப்பு- 68, நயம்-72; தட்ட பயறு- 52; கடலை பருப்பு- 34; 72 க்கு விற்ற உளுந்தம் பருப்பு- 80, நயம்- 84; கொண்ட கடலை- 34; பாசி பருப்பு- 90; பாசி பயறு- 80; மொச்சை பயறு- 48, வெள்ளை மொச்சை- 64; பட்டாணி- 22, வெள்ளை பட்டாணி- 26; 30 க்கு விற்ற மல்லி- 40. புளி- 48, நயம்- 52; வத்தல்- 65, இரண்டாவது ரகம்- 40; மலை பூண்டு- 100, சாதா ரகம்- 60; 160 க்கு விற்ற சோம்பு- 150; சீரகம்- 180; 40 க்கு விற்ற கடுகு- 50; மிளகு -200 ரூபாய். அரிசி (கிலோ): கல்சர் பொன்னி- 30; டீலக்ஸ் பொன்னி- 28; ஐ.ஆர்., 20 கல்சர்- 21; பச்சரிசி- 22; இட்லி அரிசி- 22 ரூபாய். கிலோ 64க்கு விற்ற கடலை எண்ணெய்- 68; தேங்காய் எண்ணெய்- 80; 80க்கு விற்ற நல்லெண்ணெய்- 90; பாமாயில்- 44 ரூபாய்.

**வயல்களில் ஆட்டுக்கிடைகள் அமைக்க ஆர்வம் இயற்கை விவசாயத்திற்கு மாறும் விவசாயிகள்**

சின்னமனூர்: விளைச்சல் அதிகரிப்பதால் செயற்கை உரங்களை தவிர்த்து, வயல்வெளிகளில் ஆட்டுக்கிடைகளை அமைத்து இயற்கை உரமேற்றி விவசாயம் செய்வது அதிகரித்து வருகிறது.

நெல் விவசாயத்தில் உற்பத்தி செலவு ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. உற்பத்தி செலவினங்களை குறைக்கும் வகையில், விவசாயிகள் இயற்கை தொழில் நுட்பங்களை கடைபிடிக்க முன்வந்துள்ளனர். தற்போது செயற்கை உர பயன்பாட்டை தவிர்த்து இயற்கை உரங்களை பயன்படுத்த துவங்கியுள்ளனர். இதற்காக வயல்வெளிகளில் ஆட்டுக்கிடைகளை அமைத்து உரமேற்றுவதை விவசாயிகள் தீவிரமாக பின்பற்ற துவங்கியுள்ளனர். இரு போகம் விளையும் கம்பம் பள்ளத்தாக்கில் கிடைகள் அமைப்பது ஏப்ரல் மாதத்திலிருந்து ஜீன் மாதம் வரை மேற்கொள்ளப்படுகிறது. ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களிலிருந்து இதனையே தொழிலாக கொண்ட பல குடும்பத்தினர் தேனி மாவட்டத்திற்கு வந்து தங்கி இத்தொழிலை செய்து வருகின்றனர்.

ஆங்கூர்பாளையம், ஆனைமலையன்பட்டி, அப்பிபட்டி, தென்பழனி, உ.அம்மாபட்டி, ஓடைப்பட்டி ஆகிய ஊர்களிலிருந்தும் இத்தொழிலாளர்கள் கிடைகள் போடுகின்றனர். நாள் ஒன்றுக்கு ஒரு ஆட்டிற்கு ஒரு ருபாய் ஐம்பது பைசா வாடகையாக வசூலிக்கின்றனர். ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஆயிரம் ஆடுகள் என்ற கணக்கில் வயல்களில் ஆடுகளை நிறுத்துகின்றனர். அதன்படி ஒருநாளைக்கு ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஆயிரத்து ஐநூறு ருபாய் செலவாகிறது. அப்படி ஒரு நாள் மட்டும் நிறுத்தினாலே போதுமானது. இந்த செலவானது மற்ற உரத்தினைவிட குறைவானதேயாகும். ஆட்டுக்கிடை அமைப்போருக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

**திண்டுக்கல் உழவர்சந்தைக்கு வரத்து குறைவு; விலை அதிகரிப்பு**

திண்டுக்கல்: திண்டுக்கல் உழவர்சந்தைக்கான காய்கறி வரத்து கடந்த மாதத்தை விட ஆயிரத்து 600 கிலோ குறைந்துள்ளது.

திண்டுக்கல்லைச் சுற்றியுள்ள பல கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது காய்கறிகளை உழவர்சந்தைக்கு கொண்டு வருகின்றனர். இருப்பினும் வரத்து குறைவு காரணமாக இங்கு வரும் காய்கறிகளின் அளவும் குறைந்துள்ளது.கடந்த மே 1ல் திண்டுக் கல் உழவர் சந்தைக்கான காய்கறி வரத்து, 23 ஆயிரத்து 101 கிலோவாக இருந்தது. இவற்றின் மதிப்பு நான்கு லட்சத்து 75 ஆயிரத்து 265 ரூபாயாகும். நேற்றைய நிலவரப்படி, மொத்த காய்கறி வரத்து 21 ஆயிரத்து 506 கிலோவாக குறைந்திருந்தது. இவற் றின்

விலை ஐந்து லட்சத்து 12 ஆயிரத்து 924 ஆகும். நேற்றைய நிலவரப்படி தக்காளி 38, கத்தரி 20, வெண்டை 16, புடலங்காய் 14, பீர்க்கங்காய் 16, அவரைக்காய் 46, முருங்கைக் காய் 24, பீன்ஸ் 28, பட்டர் பீன்ஸ் 56, சோயா பீன்ஸ் 40, கேரட் 16க்கு விற்றன.

**விவசாயத்திற்கு மானியம்**

மதுரை: மதுரை மேற்கு வேளாண் உதவி இயக்குனர் சுருளிபொம்மு அறிவிப்பு: ஆதார விதை மற்றும் சான்று விதை உற்பத்தி வினியோகத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது. ஜிப்சம் உரம் எக்டேர் ஒன்றுக்கு 200 ரூபாய், உயிர் உரங்கள் 100 ரூபாய், என்.பி.வி.வைரஸ் 250 ரூபாய், கைத்தெளிப்பான் ஒன்றிற்கு 800 ரூபாய், நீர் கடத்தும் குழாய் 15,000 ரூபாய், டி.ஏ.பி.2 சதவீத உர கரைசல் தெளிக்க எக்டேர் ஒன்றிக்கு 100 ரூபாய்,நுண்ணூட்ட உரம் தெளிக்க 500 ரூபாய்,தெளிப்பு நீர் பாசனம் அமைக்க எக்டேர் ஒன்றுக்கு 7500 ரூபாய் என மானியம் வழங்கப்படுகிறது.நெல் தரிசில் பயறு சாகுபடி செய்ய, நெல் வரப்பில் பயறு விதைக்க, விதைப்பண்ணை அமைக்க, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மற்றும் பயிர் பாதுகாப்பு செயல் விளக்கத் திடல் அமைக்க ஐசோபாம், ஆத்மா, விதைக்கிராமத் திட்டம், நீர்வள, நிலவளத் திட்டங்களில் பயிற்சி மற்றும் செயல் விளக்கத் திடல் அமைப்பதற்கும் மானியம் வழங்கப்படுகிறது.

**தமிழகத்தில் 81.50 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செம்மை நெல் சாகுபடியில் இலக்கு**

கிருஷ்ணகிரி: ""செம்மை நெல் சாகுபடி மூலம் நடப்பாண்டில் தமிழகத்தில் 81 லட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது,'' என, வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் நந்தகிஷோர் தெரிவித்தார்.

தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டம் தேவசமுத்திரத்தில் வேளாண் துறை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. கலெக்டர் சண்முகம் தலைமை வகித்தார். கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் துறை இணை இயக்குனர் ராஜன் வரவேற்றார்.

தமிழக வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் நந்தகிஷோர், விவசாயிகளுக்கு 3 லட்ச ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளையும், டான்வாபி பண்ணை மகளிர் குழுவுக்கு வேளாண் கருவிகளை வழங்கி பேசியதாவது: தமிழகத்தில் விவசாயத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. இந்தாண்டு ஒவ்வொரு மகளிர் சுய உதவிக் குழுவினருக்கும் நாற்று நடவு இயந்திரம், ரீடர், நர்சரி அமைக்கும் கருவி ஆகியவை முழு மானியத்துடன் வழங்கப்படும்.

"விவாசயத்திற்கு ஆட்கள் கிடைப்பது பெரும் பிரச்சனையாக உள்ளது' என, விவசாயிகள் தெரிவித்தனர். இதை ஈடுசெய்ய இந்த ஆண்டு 60 கோடி ரூபாய் மதிப்பில் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய வேளாண் கருவிகளை வாங்கி 100 சதவீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்க உள்ளோம். இதை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

செம்மை நெல் சாகுபடி திட்டத்தில் தமிழகத்தில் கடந்த ஆண்டு 71 லட்சம் மெட்ரிக் டன் நெல் சாகுபடி செய்யப்பட்டது. ந்தாண்டு 8.5 லட்சம் ஹெக்டேர் பரப்பில் 81 லட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதே போல் சிறு தானியங்கள் 23 லட்சம் மெட்ரிக் டன்னும், பயறு வகைகள் 7 லட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் டன்னும் உற்பத்தி செய்ய இலக்கு

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த உற்பத்தி இலக்குகளை அடைய வேளாண் துறை அனைத்து நடவடக்கைகளையும் எடுத்து வருகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

வேளாண் ஆணையாளர் கோசலராமன் பேசியதாவது: துல்லிய பண்ணை திட்டம் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு பின் படிப்படியாக மற்ற மாவட்டங்களிலும் 22 ஆயிரம் ஹெக்டேர் அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பயறு வகைகளின் விலை அதிகரிப்பதை தடுக்க தேசிய அளவில் ஒரு குழுவும், மாநில அளவில் தலைமை செயலாளர் தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பபட்டுள்ளது. இந்த குழுக்கள் விலையை கட்டுப்படுத்தும் வகையில் பயறுவகை உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கும் ஆலோசனை வழங்கும். தமிழகத்தில் பயறு வகையை பொறுத்தவரையில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு உற்பத்தி மிக அதிகமாக இருக்கும்.

செம்மை நெல் சாகுபடியை அதிகரிக்க விவசாயிகளுக்கு 50 ஆயிரம் செயல் விளக்க முகாம்கள் நடத்தப்படவுள்ளது. பண்ணை மகளிர் குழுக்களுக்கு வழங்கப்படும் கோனாவீடர் மற்றும் மார்க்கர் கருவிகளை பயன்படுத்தி அதிக அளவில் நெல் உற்பத்தி செய்து நமது நாடு விவசாயத்தில் தன்னிறைவு பெறும் சூழ்நிலையை உருவாக்கிட விவசாயிகள் முன் வரவேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

வேளாண் பொறியியல் துறை தலைமை பொறியாளர் சுப்பிரமணி, தோட்டக்கலை துறை கூடுதல் இயக்குனர் சுப்பையா, வேளாண் துறை கூடுதல் இயக்குனர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் திட்ட விளக்கவுரையாற்றினர். தமிழக விவசாயிகள் சங்க மாநில துணை தலைவர் ராமகவுண்டர், டான்வா பீ பண்ணை மகளிர் குழு தலைவிகள் அனிதா, சித்ரா, வித்யா ஆகியோர் உள்ளிட்ட விவசாயிகள் பலர் விழாவில் கலந்து கொண்டனர். வேளாண்மை அலுவலர் பச்சையப்பன் நன்றி கூறினார்.

**தமிழக மையங்களில் பட்டுக்கூடு கொள்முதல் : உற்பத்தியாளர் பிரச்னைக்கு தீர்வு**

உடுமலை : வெளிமாநில மையங்களுக்கு இணையாக, தமிழக கொள்முதல் மையங்களில் பட்டுக்கூடுகளுக்கு விலை கிடைக்கிறது. இதனால், உற்பத்தியாளர்கள் வெளிமாநிலங்களுக்கு கூடுகளை விற்பனைக்காக கொண்டு செல்வது பல மடங்கு குறைந்துள்ளது.

உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் நாள்தோறும் சராசரியாக ஒரு டன் பட்டுக்கூடுகள் உற்பத்தியாகின்றன. பட்டுக்கூடுகளை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றும் "ரீலிங்' மற்றும் "வீவிங்', தொழிற்சாலைகள், தமிழகத்தில் அதிகளவு இல்லை. இதனால், பட்டுக்கூடுகளுக்கான விற்பனை சந்தை பிரச்னையாகவே இருந்து வந்தது. கர்நாடகா ராம்நகர் சந்தையில் அதிகளவு ரீலர்கள் பங்கேற்பதால், கூடுகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. உடுமலை உற்பத்தியாளர்கள் ஒருங்கிணைந்து சரக்கு வாகனங்கள் மூலம் கூடுகளை அம்மையத்துக்கு எடுத்துச் செல்கின்றனர். கூடுகளை கொண்டு செல்லும் போது மொழி பிரச்னை, வாடகை, வரி மற்றும் செக்போஸ்ட்களில் கட்டாய வசூல் உட்பட பல பிரச்னைகள் ஏற்படுகின்றன. மாநில எல்லைகளில் போராட்டம் நடந்தால் கூடுகள் அனைத்தும் வீணாகி நஷ்டம் ஏற்படும்.

மாநில பட்டு வளர்ச்சித்துறை சார்பில், கோவை, தர்மபுரி, பெண்ணாகரத்தில் இயங்கும் மையங்களில் போதிய "ரீலர்'கள் வராததால் விலை கிடைக்காத நிலை இருந்தது. இந்நிலையில், விற்பனை சந்தை

பிரச்னைக்கு தீர்வு காண, பட்டு வளர்ச்சி துறை ஆணையர் உத்தரவு அடிப்படையில், தமிழக கொள் முதல் மையங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ரீலர்கள் மற்றும் உற்பத்தியாளர்களை வரவழைக்க விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கர்நாடகா ராம்நகர் சந்தை நிலவரத்தை அடிப்படையாக கொண்டு கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டது. தமிழகத்தில் இயங்கும் ரீலிங் தொழிற்சாலை மற்றும் இதர தேவைக்கான கூடுகளை தமிழக மையங்களிலேயே கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால், கோவை, பெண்ணாகரம், தர்மபுரி மையங்களில் கூடுகளுக்கு நல்ல விலை கிடைத்தது. கர்நாடகா மையத்துக்கு, தமிழக மைய விலைக்கும் அதிகபட்சமாக 20 ரூபாய் அளவே வித்தியாசம் நிலவுகிறது. ஒரு கிலோ கூட்டுக்கு சராசரியாக 250 ரூபாய் வரை கோவை உட்பட தமிழக மையங்களில் விலை கிடைக்கிறது. தற்போது, உடுமலை மற்றும் சுற்றுப்பகுதியில் இருந்து மாதத்துக்கு 30 டன் வெண்பட்டுக்கூடுகள் பெண்ணாகரம் மையத்தில் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன.

பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் பன்னீர்செல்வம் கூறியதாவது: வெளிமாநிலங்களுக்கு வெண்பட்டுக்கூடுகளை விற்பனைக்காக கொண்டு செல்லும்போது, உற்பத்தியாளர்கள் பல்வேறு பிரச்னைகளை சந்தித்து வந்தனர். தற்போது, தமிழக மையங்களிலேயே கூடுகளை விற்பனை செய்ய உற்பத்தியாளர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். உடுமலை பகுதி கூடுகள் தரமாக இருப்பதால், தொழிற்சாலை நிர்வாகத்தினர் நேரடியாக கொள்முதல் செய்யத்துவங்கியுள்ளனர். கர்நாடகா மாநிலத்துக்கு இணையாக தமிழக மையங்களிலும் விலை கிடைப்பதால், உற்பத்தியாளர்களின் விற்பனை சந்தை பிரச்னைக்கு தீர்வு ஏற்பட்டுள்ளது, என்றார்.

**வெல்ல உற்பத்தி ஆலையில் தீ விபத்து**

மடத்துக்குளம் : வேடபட்டியில் தனியாருக்கு சொந்தமான வெல்ல உற்பத்தி ஆலையில் தீ பிடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. மடத்துக்குளம் அருகே வேடபட்டியில் முருகசாமி( 55) என்பவருக்கு சொந்தமான வெல்ல ஆலை உள்ளது. ஆலையின் முன்பகுதியில் கரும்பு சாறு எடுக்கப்பட்ட சக்கைகள் குவிக்கப் பட்டிருந்தன. நேற்று மதியம் இந்த கரும்பு சக்கைகளில் திடீரென தீப்பிடித்து எரிய தொடங்கியது. வேலை பார்த்தவர்கள் பதறியடித்து ஆலையை விட்டு வெளியேறினர். தகவலறிந்த உடுமலை தீயணைப்பு படையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர்.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

---

***உணவுப் பதப்படுத்துதல் துறை உற்பத்தி வளர்ச்சி 14.9 சதவீதமாக அதிகரிப்பு***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*இந்திய உணவுப் பதப்படுத்துதல் துறையின் வளர்ச்சி 14.9 சதவீதமாக அதிகரித்துள்ளது என மத்திய*

அமைச்சர் சுபோத் காந்த் சகாய் தெரிவித்தார். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இத்துறை 6 சதவீத அளவிற்கே வளர்ச்சி கண்டிருந்தது.

இலக்கு நிர்ணயம்

தற்போது நாட்டில் உற்பத்தியாகும் அனைத்து வகை உணவுப் பொருள்களின் உற்பத்தியில் 10 சதவீதமே பதப்படுத்தப்படுகிறது. இதனை 2015–ஆம் ஆண்டுக்குள் 20 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார். மேலும் தற்போது 1.3 சதவீத அளவிற்கே பதப்படுத்தப்பட்ட உணவு பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனையும் 3 சதவீதமாக உயர்த்த திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 2007–ஆம் ஆண்டில், உலக அளவில் மேற்கொள்ளப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் வர்த்தகத்தில் இந்தியாவின் பங்களிப்பு 1.4 சதவீதமாக இருந்தது. அவ்வாண்டில் நம் நாடு 21–வது இடத்தில் இருந்தது. 1980 முதல் 2007 வரையிலான காலகட்டத்தில் இப்பொருள்களின் ஏற்றுமதி 1.1 சதவீதம் என்ற அளவில் இருந்து 1.4 சதவீத அளவிற்கே உயர்ந்துள்ளது. அதிலும் குறிப்பாக 2000–ஆம் ஆண்டுக்கு பிறகே முன்னேற்றம் காணப்படுகிறது. எனினும் ஒட்டுமொத்த உணவு, பானங்கள் ஏற்றுமதியைக் காட்டிலும் பதப்படுத்தப்பட்ட பொருள்களின் ஏற்றுமதி வேகமாக வளர்ச்சி கண்டு வருகிறது.

தென்கிழக்கு ஆசியா

நம் நாட்டிலிருந்து பெரும்பாலும் அருகாமையில் உள்ள நாடுகளுக்கே அதிக அளவில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தென்கிழக்கு ஆசிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள், கிழக்கு ஆசிய நாடுகள், மேற்கு ஐரோப்பிய நாடுகள், ஆப்பிரிக்கா, கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சர்வதேச அளவில் பல நாடுகளும் அவற்றுக்கு அருகாமையில் உள்ள நாடுகளில் இருந்தே இவ்வகைப் பொருள்களை இறக்குமதி செய்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

உணவு பதப்படுத்துதல் துறை குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது என்றாலும் இத்துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. குறிப்பாக சேமிப்புக் கிடங்குகள் மற்றும் குளிர்பதனக் கிடங்குகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் போதிய அளவிற்கு இல்லை. உணவுப் பொருள்கள் கெட்டு விடாமல் நீண்ட தூரம் எடுத்துச் செல்லும் வகையில் குளிர்பதன வசதி செய்யப்பட்ட சரக்கு வாகனங்களும் தேவையான அளவிற்கு இல்லை. இது போன்ற குறைபாடுகளால் உணவுப் பொருள்களும், வேளாண் விளைபொருள்களும் வீணாகி விடுகின்றன.

## ஜனவரி–மே மாத காலத்தில் காபி ஏற்றுமதி 50% உயர்வு

நடப்பு ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் (ஜனவரி–மே மாதம்) நாட்டின் காபி ஏற்றுமதி அளவில் அடிப்படையில் 50 சதவீதம் உயர்ந்துள்ளது.

1.30 லட்சம் டன்

சென்ற ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இந்திய நிறுவனங்கள் 86,645 டன் காபி ஏற்றுமதி செய்துள்ளன. இது, இவ்வாண்டின் முதல் ஐந்து மாதங்களில் 50 சதவீதம் அதிகரித்து, 1.30 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. மேலும் காபி ஏற்றுமதி மதிப்பின் அடிப்படையில் 42 சதவீதம் அதிகரித்து 27.50 கோடி டாலராக (ரூ.1,300 கோடி) உயர்ந்துள்ளது. எனினும் சர்வதேச அளவில் காபி விலை சற்று குறைந்துள்ளது. சென்ற ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் சர்வதேச சந்தைகளில் ஒரு டன் காபிக்கு ரூ.1,08,161 விலை கிடைத்தது. இது, இவ்வாண்டின் முதல் ஐந்து மாதங்களில் ரூ.1,00,311 ஆக குறைந்துள்ளது.

முக்கிய நாடுகள்

இந்தியாவிலிருந்து காபியை அதிக அளவில் இறக்குமதி செய்வதில் இத்தாலி, ஜெர்மனி மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. காபி பருவம் அக்டோபர் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதத்தில் நிறைவடைகிறது. சென்ற ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து இவ்வாண்டு மே மாதம் வரையிலான எட்டு மாத காலத்தில் நாட்டின் காபி ஏற்றுமதி அளவில் அடிப்படையில் 1.22 லட்சம் டன்னிலிருந்து 43 சதவீதம் அதிகரித்து 1.74 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. மதிப்பின் அடிப்படையில் இது, 30 சதவீதம் அதிகரித்து 37.10 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

## மஞ்சூர் அருகே விலை வீழ்ச்சி காரணமாக ரோட்டில் கொட்டப்பட்ட 2 டன் பச்சை தேயிலை

மஞ்சூர், ஜூன்.3–

விலை வீழ்ச்சி காரண மாக தேவர்சோலை பகுதியில் ரோட்டில் பச்சை தேயிலை கொட்டப்பட்டுள்ளது.

தேயிலை விவசாயிகள்

நீலகிரி மாவட்டத்தில் ஏராளமான தேயிலை விவ சாயிகள் உள்ளன. மாவட் டத்தில் பொருளாதாரம் தேயிலை விவசாயத்தையே நம்பி உள்ளது. பராமரிப்பு, உரமிடுதல், பறித்தல் போன்றவை மூலம் ஒரு கிலோ பச்சை தேயிலை கிடைக்க ரூ.8 வரை செலவாகிறது.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு விவசாயிகள் வினியோகிக்கும் ஒரு கிலோ பச்சை தேயிலைக்கு ரூ.15 முதல் ரூ.18 வரை விலை கிடைத்து வந்தது. ஓரளவு விலை கிடைத்து வந்ததால் விவசாயிகள் தோட்டங்களை நன்கு பராமரித்து வந்தனர்.

ஆனால் கடந்த 3 மாத காலமாக பச்சை தேயிலை விலை படிப்படியாக குறைந்து, தற்போது ரூ.8 முதல் ரூ.9 வரை கிடைத்து வருவதால், விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்து வருகிறார்கள். ஒரு சில விவசாயிகள் விலை வீழ்ச்சி காரணமாக பச்சை தேயிலை பறிக்க ஆர்வம் காட்டுவது இல்லை.

மகசூல் அதிகரிப்பு

கடந்த சில நாட்களாக மஞ்சூர் பகுதியை தவிர மாவட்டத்தில் பல இடங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த மழையினால் தேயிலை மகசூல் அதிகரித்து உள்ளது. இதனால் விவசாயி களிடம் இருந்து பச்சை தேயி லையை கொள்முதல் செய்ய தொழிற்சாலை நிர்வாகங்கள், தனியார் ஏஜெண்டுகள் குறைந்த அளவே வாங்கி வருகிறார்கள். இதன் காரணமாக விவசாயிகளிடம் அளவுக்கு அதிகமான பச்சை தேயிலை இருப்பு உள்ளது.

இந்த நிலையில் மாவட்டத் தில் பிற பகுதிகளில் இருந்து ஒரு சில தனியார் ஏஜெண்டுகள் மஞ்சூர் பகுதியில் உள்ள தனியார் தேயிலை தொழிற் சாலைக்கு லாரிகள் மூலம் பச்சை தேயிலையை கொண்டு வருகிறார்கள். இந்த தேயிலை களை தொழிற்சாலை நிர்வாகங்கள் மிகவும் குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள். இதனால் ஏஜெண்டுகள் விரக்தி அடைந்து, பச்சை தேயிலைகளை ரோட்டின் ஓரத்தில் கொட்டிவிட்டு விடு கின்றனர்.

2 டன் பச்சை தேயிலை

இதனால் மஞ்சூர் அருகே உள்ள தேவர்சோலையில் இருந்து ஊட்டி செல்லும் ரோட்டின் ஓரத்தில் சுமார் 2 டன்னுக்குமேல் பச்சை தேயிலை கேட்பாரற்று கிடக்கிறது. இதனை பார்க்கும் தேவர்சோலை விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கவலை யுடன் செல்கிறார்கள்.

தேயிலைக்கு விலை கிடைக்காததால் தான் ரோட்டில் கொட்டப்படுகிறது. இதனை தடுக்க சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர் காலத் தில் பச்சை தேயிலைக்கு உரிய விலை கிடைக்கா விட்டால், விவசாயிகளின் வாழக்கை கேள்வி குறியாகி விடும்.

---

# வேளாண்மை செய்திகள்



## வாசனை திரவியங்கள் தயாரிக்க பயன்படும் 'எலுமிச்சை புல்'

நமது நாட்டில் பல்வேறு வகையான வாசனை திரவிய பயிர்கள் பயிரிடப்படுகிறது. அவற்றில் முக்கியமானது லெமன் கிராஸ் என்று அழைக்கப்படும் எலுமிச்சை புல்லாகும். இந்த புல் கேரள மாநிலத்தில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. வறட்சியை தாங்கி வளரும் தன்மை கொண்ட இந்த புல் தமிழ்நாட்டில் கோவை, கன்னியாகுமரி மற்றும் தேனி மாவட்டங்களில் அதிக அளவில் பயிர் செய்யப்படுகிறது.

### ரகங்கள்

இந்த புல்லில் கிழக்கு இந்திய வகை, மேற்கு இந்திய வகை, மற்றும் ஜம்மு வகை என்ற 3 வகையான ரகங்கள் உள்ளன. இதில் பிரகதி, காவேரி மற்றும் ஓடக்கள்ளி ஆகியவை முக்கிய இனங்களாகும். ஓடக்கள்ளி என்ற இனம் தமிழகத்தில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

எல்லா வகை மண்ணிலும் இந்த புல் நன்கு வளரும் தன்மை கொண்டது. சத்து குறைவான மண்வகைகளிலும் இதை பயிரிடலாம். மேலும் களர் மற்றும் உவர் நிலங்களிலும் பயிர் செய்யலாம். எல்லா வகையான தட்ப வெப்ப நிலையிலும் வளரக்கூடிய தன்மை கொண்டது. குறிப்பாக சமவெளிப்பகுதிகளிலும், 1,500 மீட்டர் உயரம் கொண்ட மலைப்பாங்கான பகுதிகளிலும் பயிர் செய்யலாம். விதைகள் மற்றும் நாற்றுகள் மூலம் பயிர் பெருக்கம் செய்யலாம். ஒரு ஏக்கருக்கு நடவு செய்ய 15 ஆயிரம் நாற்றுகள் தேவை. நாற்றுகள் நடும் போது வரிசைக்கு வரிசை 60 சென்டிமீட்டர் இடைவெளியும், ஒவ்வொரு செடிக்கும் இடையே 45 சென்டிமீட்டர் இடைவெளி இருத்தல் அவசியம்.

### நடவு முறை

இந்த புல்லை அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடவு செய்யலாம். நிலத்தை மண் கட்டிகள் இல்லாத அளவு உழவு செய்ய வேண்டும். அதன் பின்னர் பாத்திகள் அமைத்து நாற்றுக்களை நடவு செய்யலாம்.

ஒரு ஏக்கருக்கு 10 டன் இயற்கை உரம், 250 கிலோ பாஸ்பேட், 50 கிலோ பொட்டாஷ் உரத்தை அடியுரமாக இட வேண்டும். நாற்று நட்ட 30 மற்றும் 90 நாட்கள் கழித்து முறையே 30 கிலோ மற்றும் 45 கிலோ தழைச்சத்தை மேல் உரமாக இடவேண்டும். பயிர் வளர்ச்சியின் ஆரம்ப நிலையில் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாசனம் செய்தால் போதுமானது. இந்த புல் வறட்சியை தாங்கி வளர்வதால் அதிக அளவு நீர் பாசனம் செய்யத் தேவையில்லை. நாற்றுக்கள் நட்ட 4 முதல் 5 மாதங்களில் அறுவடை செய்யலாம். ஒவ்வொரு 3 அல்லது 4 மாத இடைவெளியில் நான்கு ஆண்டுகள் வரை தொடர்ந்து அறுவடை செய்யலாம்.

**மகசூல்-பயன்**

ஏக்கருக்கு 15 முதல் 20 டன் வரை மகசூல் கிடைக்கும். இதன் மூலம் 50 கிலோ முதல் 60 கிலோ எண்ணெய் கிடைக்கும். இதில் இருந்து பெறப்படும் எண்ணெய் சோப்பு மற்றும் வாசனை திரவியங்கள் தயாரிக்க பயன்படுகிறது. மேலும் கிருமி நாசினியாகவும், பூச்சி கொல்லி மருந்தாகவும் பயன்படுகிறது.

தகவல்:- ஏ.கபீர், வேளாண் ஆலோசகர், வேளாண் நிலையம், தாராபுரம்.

### மல்பெரி பயிர்-பட்டுப்புழுக்கள் கழிவுகள் மூலம்

## இயற்கை உரம் தயாரிக்கும் வழிமுறைகள்

இந்தியாவில் கிராமப்புற வேளாண்மை சார்ந்த தொழில்களில் மல்பெரி மற்றும் பட்டு வளர்ப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. பட்டுப்புழு வளர்ப்பு தொழிலில் மல்பெரியின் இலை பட்டுப்புழுவிற்கு உணவாக மட்டுமல்லாது பசுந்தாள் உரமாகவும் பயன்படுத்தப்படுகிறது. பட்டுப்புழுக்களின் கழிவு மற்றும் மல்பெரியின் எஞ்சிய இலைகள், தண்டுகள் மற்றும் கழிவுகளை கொண்டு இயற்கை உரம் தயாரிக்கலாம். இவ்வாறு தயாரிக்கப்படும் உரங்கள் அதிக அளவு சத்துக்கள் கொண்டவை.

### இயற்கை உரம்

இதில் 2.0 முதல் 2.4 சதவீதம் வரையிலான தழைச்சத்து, 1.50 முதல் 1.80 சதவீதம் வரையிலான மணிச்சத்து, 0.93 முதல் 1.00 வரையிலான சாம்பல் சத்தும் அடங்கி உள்ளது. மேலும் நுண்ணூட்ட சத்துக்களான துத்தநாகம், இரும்பு, மாங்கனீஸ் மற்றும் கந்தக சத்துக்கள் இந்த இயற்கை உரத்தில் அதிகம் உள்ளன. இந்த இயற்கை உரத்தை அனைத்து பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். இதனால் மண்ணின் கட்டமைப்பு சீரடைந்து, காற்றோட்டம் அதிகரித்து நீர் உட்புகு திறன் மேம்பட்டு மண்ணின் நீர் பிடிப்புத்திறன் 30 சதவீதம் அதிகரிக்கிறது.

நடைமுறையில் தொழு உரங்களின் பற்றாக்குறையாலும், வேளாண்மையில் குறைந்த அளவே இயற்கை உரங்களை சேர்ப்பதாலும் மண் இறுகி பயிர் வளர்ச்சி குறைந்து விடுகிறது. 1 ஏக்கர் மல்பெரி தோட்டத்தில் இலை அறுவடை முறையில், புழு வளர்ப்பு செய்தால் 3539 கிலோ கழிவுகளும், தண்டு அறுவடை முறையில் 3,754 கிலோ கழிவுகளும் வருடத்துக்கு கிடைக்கிறது. பட்டுப்புழு வளர்ப்பின் மூலம் 2,400 கிலோ கழிவுகள் கிடைக்கிறது.



இயற்கை உரம் தயாரித்தலில் சூப்பர் பாஸ்பேட் மற்றும் சூடோமானாஸ் இடுதல், சாணக்கரைசல் தெளித்தல் முறைகளை படத்தில் காணலாம்.

### தயாரிப்பது எப்படி?

பட்டுப்புழு படுக்கை கழிவுகளை 3*1*1 மீட்டர் அளவுள்ள குழிகளில் இட வேண்டும். இக்குழிகள் 1 ஏக்கர் மல்பெரி தோட்டத்தில் 1 ஏக்கர் மல்பெரி தோட்டத்தில் இருந்து கிடைக்கும் கழிவுகளை மக்க வைக்க உதவுகிறது. இதேபோன்ற குழிகளை அருகருகே அமைத்தால் உரங்களை மாற்றி மாற்றி உபயோகிக்கலாம்.

இந்த குழிகளில் பட்டுப்புழு படக்கை கழிவுகள், தென்னை கழிவுகள் மற்றும் வேம்பு கழிவுகளை சீராக பரப்ப வேண்டும். பின்பு அதன்மீது சாணக்கரைசல் மற்றும் தேவையான அளவு நீர் தெளிக்க வேண்டும். இதனுடன் சூப்பர் பாஸ்பேட் உரத்தின் சத்தினை ஊட்டமேற்ற உதவும். இந்த முறையை அடுக்கடுக்காக செய்துவர வேண்டும். குழி நிரம்பி 30 முதல் 45 சென்டி மீட்டர் அளவு நில மட்டத்திற்கு மேல் வரும் வரை இதனை தொடர்ந்து செய்துவர வேண்டும்.

### அதிக அளவில் பயன்பெறலாம்

இந்த குழியில் உள்ள உரத்தை மழை மற்றும் வெயிலில் இருந்து பாதுகாக்க மேற்கூரை அமைத்தல் சிறந்தது. உரம் நன்றாக மக்குவதற்கு டிரைக்கோடெர்மா, சூடோமோனாஸ் மற்றும் அஸ்டர்ஜில்லஸ் போன்ற நுண்ணுயிர்களை சேர்க்க வேண்டியது அவசியம். பயிர்கள் சாகுபடியில் இயற்கை உரத்தினை விவசாயிகள் பயன்படுத்தினால் அதிக அளவில் பயன்பெறலாம்.

-தகவல்: பட்டுப்புழுவியல் துறை, வேளாண் பல்கலைக்கழகம், கோவை.

## வேளாண்மை கேள்வி—பதில்

**கேள்வி: நான் பல்வேறு வகை மரங்களை வாங்கி விற்பனை செய்ய விரும்புகிறேன். எங்கு இந்த வகை மரக்கன்றுகளை வாங்கலாம்? மாலதி, பொள்ளாச்சி.**

**பதில்:** உடுமலைப்பேட்டையில் அமராவதி மரம் வளர்ப்போர் சங்கம் என்ற பெயரில் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து தருவதற்கென்றே ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள். இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தாய் மரங்களிலிருந்து சேகரித்த தரமான விதைகளை மூலம் மரக்கன்றுகளை உருவாக்குகிறார்கள். இத்துடன் விவசாயிகள் நிலத்தின் மண் மற்றும் நீர் வசதிக்கேற்ற மரக்கன்றுகளை தேர்வு செய்து வளர்க்கவும், நிலத்தின் அமைப்புக்கேற்ப நடவு முறை தொடர்பான தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் அதிக பட்ச விலை கிடைக்க அதிகமான மற்றும் தரமான அடியுரம் உற்பத்தி செய்யும் நோக்கத்தில் முறையான உபகரணங்களை கொண்டு கவாத்து செய்ய ஏற்பாடு செய்வது உள்பட பல்வேறு ஆலோசனைகளை வழங்குகிறார்கள். இந்த சங்கத்தில் பதிவு செய்து கொண்டு தரமான மரக்கன்றுகளை பெறலாம். இவர்களை அமராவதி மரம் வளர்ப்போர் சங்கம், 22/49 ஜி.டி.வி நகர், உடுமலைப்பேட்டை என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**கேள்வி: நான் மூலிகைகளை வாங்கி மதிப்பூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி விற்பனை செய்ய விரும்புகிறேன். யாரிடம் ஆலோசனை பெறலாம்? திருமூர்த்தி, திருப்பூர்.**

**பதில்:** மூலிகைகளை தொழில்ரீதியாக சாகுபடி செய்து விற்பனை செய்ய விரும்பினால் சென்னையில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சிநிலையம், 3 வது குறுக்கு சாலை, தரமணி, சென்னை– 600 113 என்ற முகவரிக்கு எழுதுங்கள். விபரங்களை தெரிவிப்பார்கள்.



**விவசாயிகளே உங்கள் சந்தேகங்கள், கேள்விகளை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.**

**ஆசிரியர், வேளாண்மை செய்தி பிரிவு, தினத்தந்தி, கோவை–18.**

## தோட்டக்கலை துறை மூலம்

# விவசாய பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம்

ஊட்டி, ஜூன்.3–

நீலகிரி மாவட்ட உழவர் பயிற்சி நிலைய தோட்டக்கலை உதவி இயக்குனர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–

தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் ஊட்டி தோட்டக்கலை துறை உழவர் பயிற்சி நிலையம் மூலமாக தோட்ட மேற்பார்வையாளருக்கு ஒரு ஆண்டு பயிற்சி (தோட்டக்கலை துறை பயிர்கள் சாகுபடி கொய்மலர், மண் வளம் மற்றும் மண் ஆய்வு, பழ வகைகள் சாகுபடி, மருத்துவ பயிர்கள் சாகுபடி கொய்மலர் சாகுபடி, தேயிலை சாகுபடி, காளான் வளர்ப்பு, தேனீக்கள் வளர்ப்பு) பூந்தோட்ட அமைப்பாளருக்கு 6 மாத கால பயிற்சி (நிலம் தேர்ந்தெடுத்தல், நிலம் தயார் செய்தல், மண்வளம் மற்றும் மண் ஆய்வு, புற்கள் வளர்ப்பு, மலர் சாகுபடி, பயிர் சாகுபடி, பழ சாகுபடி, தேயிலை சாகுபடி, காளான் வளர்ப்பு) போன்றவை அளிக்கப்பட உள்ளன. பயிற்சியின் போது பாட திட்டம், செயல் முறைகள் உள்ளடக்கியதாக இருக்கும். இந்த பயிற்சியின் போது மாதந்தோறும் பயிற்சிக்கால உதவி தொகை வழங்கப்படும்.

பயிற்சியில் சேர்ந்து பயன்பெற தோட்ட மேற்பார்வையாளர் பயிற்சிக்கு 12–ம் வகுப்பு தேர்ச்சி பெற்று வரும், பூந்தோட்ட அமைப்பாளர் பயிற்சிக்கு 8–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவரும், தோட்டக்கலை உதவி இயக்குனர் உழவர் பயிற்சி நிலையத்தை அணுகி விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்து கொடுத்து இப்பயிற்சியில் சேர்ந்து பயன்பெறுமாறு தோட்டக்கலை உதவி இயக்குனர் உழவர் பயிற்சி நிலையம் கேட்டு கொள்ளப்படுகிறார்.

இந்த பயிற்சியில் சேர நீலகிரி மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு மட்டும் முன்னுரிமை வழங்கப்படும். பயிற்சியில் சேருவதற்கான விண்ணப்படிவங்களை அனைத்து வேலை நாட்களில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 5.45 மணி வரை தோட்டக்கலை உதவி இயக்குனர், உழவர் பயிற்சி நிலையம் அலுவலகத்தில் இருந்து பெற்று கொள்ளலாம். விண்ணப்பம் பெறுவதற்கான கடைசி நாள் வருகிற 14–ந் தேதி ஆகும். பூர்த்தி செய்ய விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் வருகிற 21–ந் தேதி ஆகும். பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றவர்களுக்கு அரசு பணி வழங்குவது உத்தரவாதம் இல்லை. மேலும் விபரங்களுக்கு தோட்டக்கலை இணை இயக்குனர் அலுவலகத்தின் கீழ் செயல்படும் உழவர் பயிற்சி நிலையம் ஊட்டி தோட்டக்கலை உதவி இயக்குனரை அணுகுமாறு கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.